14-10-14 Dinathanthi





கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரியில் நடப்பட்ட ஆலமரம் துளிர்விட்டு வளர்ந்துள்ளதை படத்தில் காணலாம்

### வேரோடு பாதுகாப்பாக அகற்றப்பட்டது

# மெட்ரோ ரெயில் திட்டத்துக்காக வேறு இடத்துக்கு மாற்றப்பட்ட மரங்கள்

## துளிர்விட்டு வளருவதாக அதிகாரிகள் மகிழ்ச்சி

சென்னை, அக்.14–

சென்னையில் மெட்ரோ ரெயில் திட்டத்திற்காக வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட மரங்களை, ஆய்வு செய்த அதிகாரிகள் அவை துளிர்விட்டு வளருவதாக கூறினர்.

### அரியவகை மரங்கள் ஆய்வு

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக ரூ.14 ஆயிரத்து 600 கோடி செலவில் 45 கிலோ மீட்டர் தூரம் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் பணிகள் நடந்து வருகிறது. இந்தப்பணியின் போது சுற்றுச்சூழல் நெறிமுறைகளை வகுத்து பொதுமக்கள் மற்றும் சுற்றுசூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டுமானப்பணியின் போது வழித்தடம் மற்றும் திட்டத்திற்காக நிலம் எடுக்கப்படும் இடங்களில் உள்ள மரங்களை அகற்றுவதில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மிகுந்த அக்கறை செலுத்துகிறது. கட்டுமானப் பணி நடக்கும் இடத்தில் நின்ற அரியவகை மரங்களை வெட்டாமல், வேருடன் பிடுங்கி, மாற்று இடத்தில் இடம்பெயர்த்து வைக்கப்பட்டன. அவை ஒரு ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் எந்த நிலையில் இருக்கிறது என்பது குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

### மரங்கள் இடம்பெயர்வு

மெட்ரோ ரெயில் கட்டுமானப்பணிகள் நடப்பதற்கு முன்பாக சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக அப்பகுதியில் உள்ள மரங்கள் குறித்து முதல் கட்டமாக கணக்கெடுக்கப்பட்டன. குறிப்பாக மரத்தின் வகை, சுற்றளவு, உயரம், இருக்கும் இடம் ஆகியவை பதிவு செய்யப்பட்டன. தேவையில்லாமல் ஒரு மரமும் வெட்டப்படுவதில்லை. அரியவகை மரங்கள் அகற்றும் சூழ்நிலை ஏற்படும் போது அவை மாற்று இடத்தில் இடம் பெயர்த்து வைக்க பரிந்துரைக்கப்பட்டு, மிகுந்த கவனத்துடன் இடம்பெயர்த்து வைக்கப்பட்டு தொடர்ந்து வளர உறுதி செய்யப்பட்டது.

மரத்தை வெட்டுவதற்கு பதில் அதன் கிளைகளை வெட்டி, அதனை இருக்கும் இடத்திலேயே வளர முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கட்டுமான பணிக்கு இடைஞ்சலாக இருக்கும் அரிய வகை மரங்களை மட்டும் வெட்டுவதற்கு பதிலாக மாற்று இடத்தில் இடம்பெயர்த்து வைக்க முடிவு செய்யப்பட்டது.

### துளிர்விட்ட மரங்கள்

அதன்படி பணிநடக்கும் இடத்தில் இடைஞ்சலாக நின்ற அறிய வகை மரங்களான சமுத்தர கடப்பை, மந்தாரை, சரக்கொன்னை, இங்கிமரம், விதி, அலங்கார பனை, பாட்டல் பிரஷ், விருச்சம், கவுதமா, டிவிடிவி, ஆலு, அரசமரம் போன்ற 64 வகை மரங்கள் ஷெனாய்நகர், பச்சையப்பன் கல்லூரி மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி உட்பட 4 இடங்களில் இடம் பெயர்த்து புதிய இடத்தில் வைக்கப்பட்டன. இந்த மரங்கள் இடம் பெயர்க்கப்பட்டதால் தொடர்ந்து வளர்ந்துள்ளதா? வளர்ந்தால் எந்த அளவு வளர்ந்துள்ளது? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இதில் 2 மரங்கள் தவிர பச்சையப்பன் கல்லூரி மற்றும் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரியில் கடந்த ஆண்டு செப்டம்பர் 13–ந்தேதி நடப்பட்ட ஆலமரம் உட்பட அனைத்து மரங்களுமே துளிர்விட்டு வளர்ந்து வருகிறது.

கடந்த 2010–ம் ஆண்டு முதல் 2012–ம் ஆண்டு மார்ச் மாதம் வரை வேம்பு, மந்தாரை, சரக்கொன்னை, சிஸ்சு, மயில்கொன்னை, அரசமரம், குலுளேரி லில்லி, இலுப்பை, மகிழம், புங்கன், இயல்வாகை, தூங்குமூஞ்சி, மஹாகனி, நாவல், வெள்ளைமருது, பூவரசு உட்பட 15 ஆயிரத்து 827 புதிய மரங்களும் நடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 16 ஆயிரம் மரங்கள் நடப்பட்டுள்ளன. இந்திட்டத்தில் 30 ஆயிரத்துக்கும் மேல் மரக்கன்றுகள் நட்டு இலக்கை அடைந்ததன் மூலம் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பசுமை பணியை தொடர்ந்து செய்து வருகிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.